Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, MARCH 15, 2024

வெள்ளிக்கிழமை மார்ச் 15, 2024 | ஒளி: 09 கதிர்: 213 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# இருநாள் விவாதம் 20 வாக்கெடுப்பு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# “2 பெரிய வாக்கு குவியல்கள் உள்ளன”

எஸ்.பி தெரிவிப்பு: ஜே.வி.பிக்கு 15 சதவீதம் என்கிறார்

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய இரண்டு அணிகளுக்கு இடையிலேயே போட்டி இருப்பதாக நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

# “வெற்று பேச்சுக்களால் கட்டியெழுப்ப முடியாது”



நாட்டின் எழுந்துள்ள ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதில் நாடு பெறும் டொலர்களும் ரூபாய்களையும் கொண்டே அமைகிறது. டொலரையும், ரூபாவையும் ஈட்டுவதற்கு முறையான வேலைத்திட்டம் இல்லாமல் வெறும் பேச்சுக்களை வைத்து பதவிக்கு வர யாராவது யோசித்தால், நாட்டு மக்கள் இரண்டாவது அவலத்தை எதிர்நோக்குவர்.

தொடர்ச்சி P2





# கனடாவில் அறுவர் படுகொலை
# சந்தேகநபரின் YouTube கணக்குகள் முடக்கம்

கனடாவில் இலங்கை குடும்பத்தைக் கொலை செய்த சந்தேக நபரின் YouTube கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டாவாவில் வீடொன்றில் வைத்து 6 பேரைக் கொன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இலங்கை மாணவன் 19 வயது பேப்ரியோ டி சொய்சா தொடர்பில் மேலும் பல தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்ட

தொடர்ச்சி P2



# மாணவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் செல்விக்கு வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழாவில், ஊடகத்துறையில் ஆண்டுதோறும் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும், யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இவ்வாண்டு கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# “நாடு பின்னோக்கிச் செல்லும்”

வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டால், நாடு பின்னோக்கிச் செல்லும் வாய்ப்பு உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இளைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

வாகன சந்தையில் உள்ள பிரச்சினைகளை நான் அறிவேன். ஆனால் இன்னும் எங்களின் கையிருப்புத் தொகை நல்ல நிலையில் இல்லை.


தொடர்ச்சி P2



# IMF பிரதிநிதிகளை NPP சந்தித்தது

சர்வதேச நாணய நிதியத்தின் (International Monetary Fund) இலங்கை தொழிற்பாடுகள் பிரதானி பீற்றர் புறூவர் (Peter Breuer) உள்ளிட்ட குழுவினருக்கும் தேசிய மக்கள் சக்தியின் (National People’s Power) பிரதிநிதிகளுக்கும்

தொடர்ச்சி P2





# 3 பொருட்களின் விலை குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் மொத்த விலை குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# வெடிபொருட்களை அகற்றும் உபகரணங்களை கையளித்தது சீனா

சீன இராணுவ மானியத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சுக்கு, விசேட வெடிபொருட்களை அகற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே ஆகியோர் தலைமையில் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது அவற்றை பெற்றுக்கொண்டனர்.

தொடர்ச்சி P2

# இரண்டு பிள்ளைகளை கொன்றுவிட்டு தன்னுயிரை மாய்க்க முயன்ற தந்தை

■ பாறுக் ஷிஹான், கனகராசா சரவணன்


தனது இரு பிள்ளைகளையும் படுகொலை செய்துவிட்டு தன்னுயிரை மாய்க்க முயன்ற தந்தை காப்பாற்றப்பட்டுள்ள சம்பவம் அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

பெரிய நீலாவணை முஸ்லீம் பிரிவு பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் இவ்வனர்த்தம், வியாழக்கிழமை (14) இடம்பெற்றுள்ளது.

மனவளர்ச்சி குன்றிய இரு பிள்ளைகளைக் கொன்று விட்டே, தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளார்.

தொடர்ச்சி P2





# நீர்மட்டம் குறைகின்றது

■ செ.தி.பெருமாள்

மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையை தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக வேகமாக குறைந்து வருகிறது.

தொடர்ச்சி P2

# அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் உள்ளனர்

தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் காணப்படும் நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. அளவுக்கதிகமான சீனி மற்றும் பால் மா பாவனையே இதற்கான பிரதான காரணமாகும் என்று சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்காக 300 மில்லியன் டொலரும், பால் மா இறக்குமதிக்காக 350 - 400 மில்லியன் டொலரும் ஒதுக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2





# உணவு ஒவ்வாமையால் அறுவர் பாதிப்பு

உணவு ஒவ்வாமை காரணமாக பசறை ஆரம்ப பாடசாலை மாணவர்கள் குழுவொன்று பசறை மாவட்ட வைத்தியசாலையில் வியாழக்கிழமை (14) அனுமதிக்கப்பட்டுள்ளதாக நமுனுகுல பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மாணவர்கள் பாடசாலை வழங்கிய சோறு, கங்குன் கீரை, பருப்பு, கருவாடு கலந்த கிழங்கு பொரியல், ஆகியவற்றின் கலவையை உண்ட பின்னர் மயங்கி விழுந்து பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “2 பெரிய வாக்கு குவியல்கள் உள்ளன”

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (14) நடைபெற்ற நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த எஸ். பி.திஸாநாயக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மேலே கூறப்பட்ட இரு அணிகளுக்கு இடையில் மட்டுமே போட்டி நிலவுகின்றது, அதன் பின்னர் சுமார் பதினைந்து சதவீத வாக்கை எடுக்கும் குழு உள்ளது என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வாக்குகள் குவியல்கள் உள்ளன, அவற்றில் இரண்டு பெரிய குவியல்கள், அவற்றில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தி மற்றையது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. ஜனதா விமுக்தி பெரமுனா தலைமையிலான குழுவிற்குக் கீழ் மட்டத்தில் 15 சதவீத வாக்குகள் மட்டுமே உள்ளன.

அடுத்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற சிறு கட்சிகள் ஐந்து சதவீதத்துக்கும் குறைவான வாக்குகள் உள்ளன. இறுதியாக, எங்களிடமிருந்து பிரிந்த கட்சிகள் மற்றும் புதிதாக நிறுவப்பட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இரண்டு சதவீதத்திற்கும் குறைவானவர்கள் என்றார்.

அத்துடன், சபாநாயகருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பு பைத்தியக்காரத்தனமான வாக்கெடுப்பு என்று தெரிவித்த அவர், பொலிஸ் மா அதிபரைத் தெரிவு செய்வதற்கான வழிமுறைகள் 100% சரியானவை என்றார். தன்னம்பிக்கை குறைபாட்டைச் சமாளித்தால் எந்த முடிவுகளையும் அப்படியே எடுக்க வேண்டும்.அதில் எந்த வாதமும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஏமாற்றப்பட்ட விதம், ஏமாந்தது மற்றும் அவரை வீழ்த்துவதற்கான சதிகள் பற்றியே எழுதியுள்ளார்.

# செல்விக்கு வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா, வியாழக்கிழமை (14) ஆரம்பமானது, வெள்ளிக்கிழமை (15) மற்றும் சனிக்கிழமை (16) ஆகிய தினங்களிலும் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி, ஊரடங்கு வேளையில் அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்துப் பெற்றோர் முன்னிலையில் ஆயுத தாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ்.இந்துக் கல்லூரியில் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் ‘நிலா நிதியம்’ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது.

இந்நிதியத்தின் அங்குரார்ப்பண சான்றிதழ் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலின் போது, யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ். பல்கலைக்கழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது. இதன்மூலம் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது.

# 3 பொருட்களின் விலை குறைப்பு

இதன்படி, ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் மொத்த விலை 300 ரூபாவில் இருந்து 265 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் மொத்த விலை 190 ரூபாவில் இருந்து 175 ரூபாவாகவும், பருப்பு கிலோ கிராம் ஒன்றின் மொத்த விலை 350 ரூபாயிலிருந்து 285 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது தங்களிடம் போதுமான அளவு வெள்ளை சீனி, கோதுமை மாவு மற்றும் பருப்பு கையிருப்பு இருப்பதாகவும், வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை எந்தவித தடையுமின்றி வாங்க முடியும் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளை சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும், சில பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் அந்த பொருட்களின் விலைகள் குறைவடையவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “நாடு பின்னோக்கிச் செல்லும்”

இந்த நிலைமையில், வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டால், நாடு பின்னோக்கிச் செல்லும் வாய்ப்பு உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய வாகன இறக்குமதியை அடுத்த ஆண்டு முதல் படிப்படியாக அனுமதிக்க உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த இலக்கை நோக்கிய ஒரு படியாக இந்த ஆண்டு, சுற்றுலாப் போக்குவரத்துக்கான பேருந்துகளை இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார்.



# IMF பிரதிநிதிகளை NPP சந்தித்தது

இடையிலான கலந்துரையாடலொன்று கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் வியாழக்கிழமை (14) முற்பகல் நடைபெற்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பினதும் மோசடி, ஊழல்களைத் தடுத்தலுடன் தொடர்புடைய செயற்பாங்குகளினதும் முன்னேற்றம் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டிராத தொழில்நுட்ப ஒத்துழைப்பு அறிக்கை பற்றியும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் விசாரிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவம் செய்து பீற்றர் புறூவருக்கு மேலதிகமாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சேர்வத் ஜஹான், கெட்சியரினா ஸ்விட்சென்கா (Katsiaryna Svieydzenka) மற்றும் மானவீ அபேவிக்ரம ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்த சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்து தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் முதித்த நாணயக்கார மற்றும் பொருளாதாரப் பேரவையின் அங்கத்தவர்களான பேராசிரியர் அனில் ஜயந்த, பேராசிரியர் சீதா பண்டார, கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும மற்றும் சுனில் ஹந்துன்னெத்தி ஆகியோர் பங்குபற்றினர்.

# வெடிபொருட்களை அகற்றும் உபகரணங்களை கையளித்தது சீனா

உபகரணங்களை வழங்குவது தொடர்பான ஆவணங்களில் முறையான கையொப்பமிடுதல் நிகழ்வு கியூ சென்கொங் மற்றும் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருக்கு இடையே நடைபெற்றது.

பதினெட்டு REOD 4,000 வெடிகுண்டு அகற்றும் நடுத்தர ரோபோக்கள், பதினெட்டு REOD 400 வெடிக்கும் ஆயுதங்களை அகற்றும் ரோபோக்கள், 10 வெடி எதிர்ப்பு போர்வைகள், 10 வெடி பாதுகாப்பு தாங்கிகள் மற்றும் வாகனங்கள் அடையாளமாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

# அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் உள்ளனர்

எனவே, இவற்றின் பாவனையைக் குறைப்பதன் மூலம் சுகாதாரத்துறைக்கு மாத்திரமின்றி, பொருளாதாரத்துக்கும் பாரிய ஒத்துழைப்பினை வழங்க முடியும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன சுட்டிக்காட்டினார்.

தேசிய உள்நாட்டு மருத்துவ தினத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் நாட்டு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளன. இவை தொடர்பில் மக்களுக்குத் தொடர்ந்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். என அவர் தெரிவித்தார்.

# நீர்மட்டம் குறைகின்றது

காசல்ரீ, மவுசாகலை, கெனியோன், லக்ஷபான,நவ லக்ஷபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளன.

மவுஸ்சாக்கலை நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 23 அடி குறைந்துள்ளது. காசல்ரீ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 22 அடி குறைந்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கி கிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள், அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளன. பற்றைக்காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் தீ வைப்பதனால் நீரூற்றுக்கள் அற்றுப்போய் பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றன.

எனவே, காடுகளுக்கு தீ மூட்டுவதனை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த வறட்சியான காலநிலை தொடர்ச்சியாக நீடிக்கும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இருநாள் விவாதம் 20 வாக்கெடுப்பு

20ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (14) கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# “வெற்று பேச்சுக்களால் கட்டியெழுப்ப முடியாது”

2019ஆம் ஆண்டைப் போன்று 2024ஆம் ஆண்டிலும் மக்கள் பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மேலும், உண்மை, யதார்த்தம், தரவு, அறிவியல் மற்றும் பரிசோதனைகள், பகுப்பாய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கொள்கை உருவாக்கத்திற்கு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும். கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றைச் செயல்படுத்துதல், கண்காணித்தல், பின்தொடர்தல் மற்றும் மீளாய்வு செய்தல், பின்னூட்டம் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 122 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அநுராதபுரம் கே.பீ.ரத்நாயக்க மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு புதன்கிழமை (13) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தியின் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும். நாட்டின் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் எதிர்காலத்தை வலுப்படுத்த ரூபாய்களும் டொலர்களும் தேவை, இந்த டொலர்களை பொருளாதார அபிவிருத்தியின் மூலம் மட்டுமே ஈட்டிக்கொள்ள முடியும். அறிவை மையமாகக் கொண்ட, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதாரம், நேரடி அன்னிய முதலீடு முறைமையின் ஊடாகவே, விழுந்து கிடக்கும் தேசத்தை மீண்டும் பெருமைக்குரிய தேசமாகக் கட்டியெழுப்ப முடியும்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கம் Education First என்ற கொள்கையாகும். கல்விக்கு முதலிடம் வழங்குவதே தனது பிரதான இலக்கு என்றாலும், இந்த கல்வி முறை நவீனமயப்படுத்தப்பட வேண்டும்

உயரடுக்கு பெரும் பணக்காரர்களின் பிள்ளைகளுக்கே டிஜிட்டல் ஸ்ரீலங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இலவசக் கல்வியைப் போதிக்கும் 10126 அரச பாடசாலைகளில் 41 இலட்சம் பிள்ளைகளுக்கு இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் போக்கைக் காண்பதிற்கில்லை. இந்த பிள்ளைகளின் அடிப்படை மற்றும் மனித உரிமைகள் நாளுக்கு நாள் மீறப்பட்டு வருகின்றன. காலாவதியான கல்வி முறைமையினால் ஒருசில துறைகளைத் தவிர, பெரும்பாலான துறைகளைச் சேர்ந்தவர்கள் வேலையின்மை வரிசையில் நிற்கிறார்கள். தனியார்த்துறையில் கூட அவர்களால் வேலைவாய்ப்பை எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இது பெரும் துரதிர்ஷ்டம் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.




# சந்தேகநபரின் YouTube கணக்குகள் முடக்கம்

நிலையில், YouTube கணக்கு தொடர்பான விபரங்களும் வெளியாகியுள்ளன.

குறித்த இளைஞன் Minecraft வீடியோ கேம் வீடியோ விளையாட்டிற்கு அடிமையானவராகும். அவர் அதனை Minecraft வீடியோவாக வெளியிடுவதில் பிரபலமடைந்துள்ளார்.

இந்நிலையில், இந்த கணக்கைக் கண்டுபிடித்த அதிகாரிகள் அதனை நீக்கியுள்ளதாக YouTube நிர்வாக அதிகாரி மின்னஞ்சல் ஊடாக செய்தி சேவைக்கு அறிவித்துள்ளார்.

# இரண்டு பிள்ளைகளை கொன்றுவிட்டு தன்னுயிரை மாய்க்க...

இதன்போது படுகாயமடைந்த அவர், கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படு காயமடைந்த முஹம்மது மிர்சா முகமது கலீல் (வயது-63) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். முஹம்மது கலீல் முகம்மது றிகாஸ்(வயது-29) முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா(வயது-15) ஆகியோர் உயிரிழந்தவர்களாவர். அந்த பிள்ளைகளின் தாய் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் மரணமடைந்து விட்டார்.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உணவு ஒவ்வாமையால் அறுவர் பாதிப்பு

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 6 மாணவர்களும் 3 மாணவிகளும் உள்ளதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் வைத்தியசாலை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி பல்கலைக்கழகத்தில் உள்ளக விளையாட்டரங்கில் வியாழக்கிழமை (14) கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது.

பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகிய இந்தப் பட்டமளிப்பு விழாவின்போது, 2,873 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளதுடன், 46 தங்கப் பதக்கங்கள், 09 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

– நிதர்ஷன் வினோத்













# “நம்பிக்கையில்லா பிரேரணைக்கு நாம் ஆதரவு”



■ சண்முகம் தவசீலன்

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையிலா பிரேரணை பாராளுமன்றில் பிரேரிக்கப்பட உள்ள நிலையில், அதற்குத் தாம் ஆதரவு தெரிவிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு-நட்டாங்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் தலைமையில் 99ஆவது இல்ல மெய்வல்லுனர் போட்டி புதன்கிழமை(13) பிற்பகல் இடம்பெற்றிருந்தது.

இதில் சிறப்பு விருந்தினராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கலந்துகொண்டுள்ளார். இதன்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையிலா பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

“சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையிலா பிரேரணை ஒன்று எதிர்க்கட்சியினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரேரணையில் கையொப்பம் இடுவதற்கான கோரிக்கை எமக்கு இதுவரை விடுக்கப்படவில்லை, நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

அந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் கூட அதற்கு ஆதரவாக நிச்சயம் நாங்கள் வாக்களிப்போம் எங்களிடம் அதற்குரிய ஆதரவை அவர்கள் கோரியிருக்கா விட்டாலும், எங்களைப் பொறுத்தவரைக்கும், சபாநாயகருக்கெதிரான அந்த நம்பிக்கையில்லா பிரேரணையை நாம் நிச்சயம் ஆதரிப்போம் ஏனென்று சொன்னால் அவருடைய நடுநிலையற்ற செயரற்ப்பாடுடைய போக்குகள், பல சந்தர்ப்பங்களில் அவற்றினை நாங்கள் அவதானித்திருக்கின்றோம், நேரடியாக நாங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எங்களின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பிலே கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்திலே, வேண்டுமென்றே அவரை கைது செய்வதற்கான சூழலை உருவாக்கியிருந்தார்.

ஓர் இனவாத அடிப்படையிலே தான் அவரின் செயற்பாடு காணப்பட்டிருந்தது அவர் தமிழர்களுக்கு எதிராக மட்டுமல்ல இன்று ராஜபக்ஷ அரசினுடைய காவலனாகவும், ரணில் விக்ரமசிங்கவினுடைய காவலனாகவும் அவர் இருக்கின்றாரே தவிர அரசினுடைய அல்லது பாராளுமன்றத்தினுடைய மக்களின் காவலனாக அவர் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறுகின்றார், ஆகவே இந்த் தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரத்தியேக ‘முகவரி'யுடன் வீடுகள் கையளிப்பு



தலவாக்கலை, ஒலிரூட் தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வசித்த குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானால், வியாழக்கிழமை (14) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.


அத்துடன், அவர்களுக்குப் பிரத்தியேக ‘முகவரி’ வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான கடித பெட்டியும் வழங்கப்பட்டது.


ஒலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வாழ்ந்துவந்த 24 குடும்பங்களுக்குத் தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனினும், முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளே மக்களுக்குக் கையளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டு, குடிநீர், மின்சாரம், வீதி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதன்பிரகாரம் முழுமைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டமே வியாழக்கிழமை (14) கையளிக்கப்பட்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாகாணசபை உறுப்பினர் பி.சக்திவேல், இ.தொ.காவின் உபதலைவரும், சட்டத்தரணியுமான பாரத் அருள்சாமி, முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் உட்பட மக்கள் பெரும்பாலானோர் பங்கேற்றுள்ளனர்.





# வருடாந்த பிரமோற்சவம் ஆரம்பம்

■ அ.அச்சுதன்

‘தெட்ஷணகைலாயம்’ என்னும் திருக்கோணமலையில் அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவம் வியாழக்கிழமை (14 ) காலை 8.00 மணிக்கு துவாஜாரோகணம் எனும் கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமானது.

# “மக்களின் வாக்கு சஜித்துக்கே”

■ நீலமேகம் பிரசாந்த்



“மக்களின் ஏகோபித்த வாக்குகளை சஜித் பிரேமதாசவிற்கே வழங்குவார்கள்” என ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் தெரிவிக்கையில், “கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை விரும்பி மக்கள் ஆட்சிக்கு அமர்த்தினர். ஆனால், அவரின் தன்னிச்சையான ஆட்சியாலும் நாட்டை பாதாளத்தில் தள்ளியதாலும் மக்களே துரத்தியடித்தனர். அது போலதான் இந்த அரசாங்கமும் நாட்டை கட்டியெழுப்புவோம் என கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களை மீண்டும் மீண்டும் பாதாள குழிக்கே தள்ளுகின்றனர்.குறிப்பாக மலையக மக்களின் இயல்பான வாழ்க்கை மாறியுள்ளது.பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

எனவே, மக்கள் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். அதில் மக்களின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்திக்கே காணப்படும் அதில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் கை பலமாகும் நாடு சுபீட்சநிலைக்கு செல்லும் மக்கள் எதிர்பார்த்த ஆட்சி கிடைக்கும் என்றார.

# வீதி விபத்தில் ஐந்து பேர் காயம்





■ வ.சக்தி

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, மாங்காடு பகுதியில் பாரிய விபத்து ஒன்று வியாழக்கிழமை (14) இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று, வீதியருகில் இரும்பு தளபாடங்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வட்ட ரக வானத்துடன் மோதுண்டதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் பேருந்தில் பயணித்தவர்களில், ஐந்து பேர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில், தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாகவும், பேருந்து தரிப்பிடம் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளதாகவும், தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இயலாமைக்கு முன்னால் மௌனம் காக்கும் பெண்கள்

உலகில் அழகின் அடையாளமாகத் திகழும் பெண்கள், உரிய அங்கிகாரத்தை இழந்து, வாழ்க்கைப் போரில் ஈடுபட்டுள்ளனர். அலை வீசும் அனைத்து தப்பெண்ணங்களையும் உடைத்தெறியும் வாழ்க்கைக்கு உரிய மரியாதை மற்றும் அங்கிகாரம் வேண்டி உலகெங்கிலும் உள்ள அனைத்துப் பெண்களுடன் நம் நாட்டுப் பெண்களும் கைகோர்த்து சர்வதேச மகளிர் தினத்தை உற்சாகத்துடனும், முயற்சியுடனும், போர்க்குணத்துடனும் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடினர்.

பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளில் பெண்கள் அதிகளவில் துன்புறுத்தப்படுவது தொடர்கின்றது.

காவல்துறையினரும், பெண் அதிகாரிகளும் சிவில் உடைகளை அணிந்துகொண்டு பேருந்துகளிலும், ரயில்களிலும் பயணித்துத் துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அவ்வாறு துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்துவது ஒவ்வொரு சமூகத்தின் முன்னேற்றத்திற்குமான பலம் என்பதை எல்லோரும் உணர வேண்டும். எல்லோருக்கும் உணர்த்தப்படவும் வேண்டும். பெண் விடுதலை என்பது ஒரு சமூகத்தின் விடுதலை. மானுடத்தின் விடுதலை.

அத்துடன், பெண்களால் மட்டுமே சாதிக்கக்கூடிய விடுதலை இருக்கிறது என்பது ஒரு கோட்பாடு. இந்த பூமியில் அப்படி ஒரு நிஜம் இருக்காது.

பொதுச் சமூக விடுதலையில் பெண் விடுதலையும் அடங்கும். ஆனால், வலியுறுத்தப்பட வேண்டிய உண்மை என்னவென்றால், பொதுவான சமூகப் பிரச்சினைகள் மற்றும் அழுத்தங்களில் பெண்கள் மிகவும் சோர்வடைகிறார்கள். அதனால் வேலைக்கு வரும் பெண்கள் என்று பெயர் வைத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில், கணவனின் சொற்ப சம்பாத்தியத்தால் மட்டும் குழந்தைகளின் வயிற்றில் எரியும் தீயை அணைக்க முடியாது என்பது பெண்ணுக்குத் தெரியும். எனவே, அவர்கள் கரங்களைப் பல கரடுமுரடான, கடுமையான வேலைகளில் பயன்படுத்த வேண்டியுள்ளது. சில ஆடைத் தொழிற்சாலைகளிலும், சில தொழிற்சாலைகளிலும் பெண்கள் நள்ளிரவு வரை உழைத்துவிட்டு வீடுகளுக்குச் செல்லவேண்டும்.

பல தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் அமைதியாக வாழ்க்கையை அனுபவிக்கும் வாய்ப்பை இழந்த ஒரு மோசமான நிலம் உருவாக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையை அனுபவிக்கும் ஆணையை இழந்த பல பெண்கள் பெருமூச்சுடனும் கண்ணீரோடும் தங்கள் நாட்களைக் கழித்து வருகின்றனர். அப்படி வாழ்வதில் அர்த்தமில்லை என்றாலும் வேறு வழியின்றி மனிதநேயத்தின் இயலாமைக்கு முன்னால் பல பெண்கள் மௌனம் காக்க வேண்டியதாயிற்று.

பெண்களின் இந்த இயலாமை சில பெண்ணியக் குழுக்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களின் மோசடி செய்பவர்களுக்கும் மட்டுமே டொலர் ஆதாரமாக மாறியுள்ளது என்பதுதான் மிகக் கடுமையான சோகம். இன்று இந்த மோசடிக்காரர்கள்தான் அதிகமாகக் கூச்சல் போடுகிறார்கள்.

சர்வதேச மகளிர் தினம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திசையில் அந்த மனதை ஒருமுகப்படுத்தும் நாளாக இது இருக்க வேண்டும். அல்லது நாம் தவிர்க்க முடியாமல் இன்னும் சோகமான சூழலில் கொண்டாட வேண்டியிருக்கும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும்.

எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோவிதமாக வரும் சின்னச்சின்னப் பிரச்சினைகள் வரலாம்; அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல; வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எது நடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கால்நடைகள் உயிரிழப்பு

முல்லைத்தீவு-திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சியின் இரணைமடு சந்தி வரையான ஏ-9 வீதியில் நாள் தோறும் வாகன விபத்துகளில் கால்நடைகள் உயிரிழப்பதும் படுகாயமடைவதும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு அருகில் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு உரிய விளம்பரப் பலகைகளை நடுகை செய்யுமாறு இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக இச்சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருகின்றது.

திருமுறிகண்டி, பொன்நகர், இந்துபுரம், அறிவியல் நகர் உட்பட பல பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் நிலையில், வீதியின் இரு மருங்கிலும் கால்நடைகள் உலாவும் இடம் என விழிப்புணர்வு பதாகைகளை நாட்டுவதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

பெருமளவு குடும்பங்கள் இப்பகுதிகளில் வாழ்கின்ற நிலையில், தமது வாழ்வாதாரத்திற்காகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கால்நடைகள் குடிநீருக்காக வீதியினை கடக்கின்ற போது விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றமையினால் சாரதிகள் குறித்த பகுதியில் கால்நடைகளை கருத்திற்கொண்டு வேகக் கட்டுப்பாட்டினை பேணி ஒத்துழைக்குமாறும் கால்நடை வளர்ப்பாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- நடராசா கிருஸ்ணகுமார்

## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின்–44:

# ஒரு மாநாடும் ஒரு பல்கலைக்கழகமும்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பானது சிறுபான்மையினரின் நலன்களுக்கு முரணாக இருந்தது. பல்லின, பன்மொழிப் பல பண்பாட்டு அம்சங்களை இலங்கை உள்ளடக்கியிருக்கின்றது என்பதை அரசியலமைப்பை வரைந்தவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. குறிப்பாகத் தரப்படுத்தல் ஏற்படுத்திய தாக்கங்கள் தணியும் முன்னரே நடைமுறைக்கு வந்த புதிய அரசியலமைப்பு இளையோர் மத்தியில் எதிர்ப்புணர்வை அதிகரித்தது. தரப்படுத்தலை தமக்கான அரசியல் கருவியாகப் பயன்படுத்தத் தமிழரசுக் கட்சி முயன்றது. ஆனால், அரசாங்கம் தரப்படுத்தலின் இடத்தில் தரப்படுத்தலோடு இணைந்த மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறையைப் புகுத்தியது. இது யாழ். மாவட்டத்திற்கு வெளியில் வடக்கு - கிழக்கில் இருந்த மாணவர்களுக்கு நன்மையளித்தது. இதனால் தரப்படுத்தலுக்குகெதிராகத் தமிழ் மாணவர்களது ஏகோபித்த போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது இயலாது போயிற்று. எனினும், தரப்படுத்தல் பற்றிய கசப்புணர்வு தொடர்ந்தது.

இச் சூழலிலேயே தமிழரசுக் கட்சியின் நிழலில் உருவான மாணவர் பேரவை என்ற அமைப்பு தீவிரமான நிலைப்பாடுகளை நோக்கி நகரத் தொடங்கியது. 1972ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியினர் அரசியலமைப்பை எரித்ததையடுத்து, துண்டுப் பிரசுர இயக்கத்தை நடத்திய மாணவப் பேரவை உறுப்பினர்கள் கைதாயினர். இது இளைஞர்கள் மெதுமெதுவாக வன்முறைக்குத் தூண்டப்படுகிறார்கள் என்பதைக் கோடிட்டுகாட்டியது. குறிப்பாக அமிர்தலிங்கத்தின் செல்வாக்குக்குட்பட்ட இளைஞர்கள் வன்செயல்களிற் தூண்டப்பட்டுவந்தனர். யாழ்ப்பாண முன்னாள் மேயர்துரையப்பா அவர்களுடைய முக்கிய இலக்காக இருந்தார்.

புதிய அரசியல் யாப்பை அடுத்து, தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்புத் தோற்று விக்கப்பட்டது. அதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமாகி விட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமன்றி, அதில் ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகரான தேவநாயகமும் இணைந்திருந்தமை இந்த ஐக்கிய முன்னணியின் தேவையும் நோக்கமும் பற்றிய ஐயங்களை எழுப்பியது. எவ்வாறாயினும், பின்னர் 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி என அறியப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (த.ஐ.வி.கூ.) உருவாகித் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது, இ.தொ.காவும் தேவநாயகமும் விலகினர் என்பதை இங்குக் குறிப்பிடலாம். தமிழர் ஐக்கிய முன்னணி ஒரு வலிய அரசியற் சக்தியாக இருக்கவில்லை. 1972 அரசியல் யாப்பின் பின்னணியில் மாணவர் பேரவையும் பிற இளைஞர் குழுக்களும் வன்செயல்களில் ஈடுபடத் தொடங்கினர். ஆனால், ஈழத் தமிழர்கள் மத்தியில் இவ்வன்முறைகளுக்கான ஆதரவு இருந்ததாகச் சொல்லவியலாது.

தமிழரசுக்கட்சி தனது அரசியற் செல்வாக்கை அதிகரிக்கப் பல தந்திரங்களில் இறங்க வேண்டியிருந்தது. இளைஞர் குழுக்களின் வன்முறை அரசியல் இலாபத்தைத் தராதநிலையில் புதிய அரசியலமைப்பை எதிர்த்துச் செல்வநாயகம் தனது பாராளுமன்றப் பதவியைத் துறந்தார். தனது விலகலை அடுத்து நடக்கக்கூடிய இடைத் தேர்தலைத் தமிழர் ஐக்கிய முன்னணி அரசியலுக்கு சாதகமாகப் பயன்படுத்தலாம் என அவர் கணித்தார். அவரது கணிப்பைப் பொய்ப்பிக்கும் விதமாக அரசாங்கம் அந்த இடைத் தேர்தலை 1975 வரை தொடர்ந்து பிற்போட்டுவந்தது. இதனால் செல்வநாயகம் எதிர்பார்த்தது நிகழவில்லை. இதற்கிடையில் 1973ஆம் ஆண்டில் நீதிமன்ற மொழிச்சட்டம் புகுத்தப்பட்டது. சிறுபான்மையினரை அவமதிக்கும் காரியங்களை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டது.

இச்சூழலில் 1974இல் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதைத் தனக்கு வாய்ப்பான ஒரு அரசியல் நிகழ்வாக உருமாற்றுவதில் தமிழரசுக் கட்சி முனைப்பாக இருந்தது. மாநாட்டுக்குப் பொறுப்பான இலங்கைத் தமிழாராய்ச்சி நிறுவனம் அதைக் கொழும்பில் நடத்தவே முதலிற் திட்டமிட்டிருந்தது. தமிழரசுக் கட்சிக்கு நெருக்கமான சிலர் அதை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று அழுத்தங்களைப் பிரயோகித்தனர். ஆனால், இதுவொரு அறிஞர் சந்திப்பு, இதில் அரசியலைக் கலக்கக் கூடாது என்பது பெரும்பாலானோரின் கருத்தாக இருந்தது. ஆனால், தமிழரசுக் கட்சியின் குறுக்கீட்டால் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதாக முடிவு மாற்றப்பட்டது. மாநாட்டைக் கொழும்பில் நடத்துவதன் மூலம் அரசாங்கமும் அதன் தமிழமைச்சர் குமாரசூரியரும் தமக்கு அரசியல் இலாபம் கிட்டுமென எதிர்பார்த்தனர். தமிழரசுக் கட்சிக் கணிப்புக்கள் அதற்கெதிராக இருந்தன. இந்த இழுபறியின் போக்கில் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குப் பகையான நிலைப்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டது.

இந்த முரண்பாட்டின் விளைவாக தமிழறிஞர்கள் தவிர்ந்த எவருக்கும், குறிப்பாக அரசியற் பிரமுகர்கட்கு, விசா வழங்க அரசாங்கம் மறுத்தது. அதைவிட, பலருடைய விசா வழங்கலிலும் நீண்ட தாமதங்கள் இருந்தன. தமிழாராய்ச்சி மாநாடு என்பது அறிஞர்கள் சந்திப்பாக நிகழ்வதே வழக்கம். ஆனால் வெறுமனே அறிஞர்களின் சந்திப்பாக இருந்த இந்த நிகழ்வைப் பொதுமக்களுக்கான ஒரு நிகழ்வாக்கும் நோக்கில் இறுதி நாள் நிகழ்வை யாழ்ப்பாண முற்றவெளியில் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்மூலம் மக்களிடையே தமது செல்வாக்கைப் பெருக்க தமிழரசுக் கட்சி நினைத்தது.

இந்தப் பொது நிகழ்வுக்கு பொலிஸ் கெடுபிடிகள் குறுக்கிட்டன. அரசாங்கத்தைச் சவாலுக்கு உட்படுத்தி விசா மறுக்கப்பட்ட தமிழ்த் தேசியவாதியான ஜனார்த்தனத்தைக் கள்ளமாகத் தமிழ்நாட்டிலிருந்து கடல் வழியாகக் கொண்டுவந்து மேடையேற்றி வீரசாகசம் காட்ட அமிர்தலிங்கம் உட்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலரும் இளைஞர்களும் திட்டமிட்டிருந்தனர். ஜனார்த்தனத்தைச் சட்டவிரோதமாகக் கொண்டு வந்து மேடையேற்ற ஆயத்தங்கள் நடப்பதை பொலிஸார் அறிந்திருந்தனர். ஜனார்த்தனத்தை மேடையேற்றுவது அரசாங்கத்தின் முகத்தில் அறைகிற செயல் என்பதில் இரு தரப்பினருக்கும் கருத்துவேறுபாடு இருக்கவில்லை. எனவே, ஜனார்த்தனம் மேடையில் ஏறாமற் தடுக்கவும் தேவையானாற் கைது செய்யவும் பொலிஸார் திட்டமிட்டிருந்தனர். மறுபுறம் எப்படியாவது ஜனார்த்தனத்தை மேடையில் ஏற்றிவிட வேண்டும் என்பதில் இளைஞர்கள் குறியாயிருந்தனர்.

இந்நிலையில், சட்டவிரோதமாக அழைத்து வரப்பட்ட ஜனார்த்தனத்தை மேடையேற்ற முனைந்தபோது, பொலிஸார் அவரை கைது செய்ய முனைந்தனர். இதன்போது, இளைஞர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டார்கள். அப்போது மின்சாரக் கம்பிகள் சாய்ந்து விழுந்ததால் ஏழு பேர் மின் அதிர்ச்சியால் அவச் சாவைச் சந்தித்தனர்.

இந்த அசம்பாவிதத்திற்குத் தமிழரசுக் கட்சியும் பொறுப்பு என்பதை யாரும் மறுக்க இயலாது. எனினும், மாநாட்டின் தொடக்கத்திலிருந்தே அரசாங்கமும் காட்டிவந்த பகை மனப்பான்மை முக்கியமானது. அதைவிடவும் பொலிஸ் தரப்பு மக்கள் நெருக்குகின்ற ஒரு கூட்டத்தினிடையே பாதுகாப்பைப் பேணத் தவறியமை ஏற்கத்தக்கதல்ல. எழுவரின் சாவுகள் பற்றி உரிய முறையில் விசாரணைகள் நடவாமையும் மக்கள் மனதில் வெறுப்பைவளர்த்தது. இந்நிகழ்வுகள் 1974 ஜனவரியில் நிகழ்ந்தன.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உருவாக்குவதற்கு அரசாங்கம் முடிவுசெய்தது. இதைத் தமிழரசுக் கட்சி கடுமையாக எதிர்த்தது. ஏனெனில் 1950கள் முதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பதாக தமிழரசுக் கட்சியும் இந்துப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பதாக தமிழ்க் காங்கிரஸூம் தொடர்ச்சியாகச் சொல்லிவந்தன. 1960களில் திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைக்க நிலம் வாங்கப்பட்டுள்ளதாகவும் கட்டிடப் பணிகள் நடப்பதாகவும் செல்வநாயகத்தின் பத்திரிகையாக ‘சுதந்திரன்’ தொடர்ந்து செய்திகளை வெளியிட்ட வண்ணமிருந்தன. இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் வளாகம் அமைக்க அரசாங்கம் முனைந்தமையானது தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குப் பெரிய இடியாக இறங்கியது.

புதிதாக அமையவுள்ள யாழ்ப்பாண வளாகத்திற்கு பரமேஸ்வரா கல்லூரியினதும், இராமநாதன் மகளிர் கல்லூரியினதும் கட்டிடங்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்தது. இதைக் கடுமையாக எதிர்த்துப் பிரசாரம் செய்த தமிழரசுக் கட்சியினர், அரசாங்கம் தனியாரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகக் குற்றஞ்சாட்டியது. ஆனால், இராமநாதனின் அன்றைய வாரிசாகக் கருதப்பட்ட முன்னாள் செனட்டர் எஸ்.ஆர்.கனகநாயகம் இந்தக் கட்டிடங்களில் பல்கலைக்கழகம் அமைவதற்குத் தனது முழுமையான ஆதரவை வழங்கினார்.

தமிழரசுக் கட்சியினர் இந்தப் பல்கலைக்கழகத்தால் தமிழர்களின் கலாசாரம் சீரழிந்து விடும், சிங்களவர்கள் எங்கள் இடங்களைப் பறிக்கப் போகிறார்கள் என்றும் பிரசாரம் செய்தனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் இவ்வாறான ஒரு பல்கலைக்கழக வளாகம் அமைவதற்கு மக்களின் முழுமையான ஆதரவு இருந்தது. இதை உறுதிப்படுத்தும் விதமாகத் திறப்பு விழாவிலும் அதைத்தொடர்ந்த நிகழ்வுகளிலும் மக்கள் வெள்ளம் திரண்டது.

திறப்பு விழாவை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்தது. குறித்த தினத்தில் ஹர்த்தாலை அறிவித்தது. ஆனால் ஹர்த்தால் மோசமான தோல்வியைச் சந்தித்தது. இதன் முதலாவது வளாகத் தலைவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர். க.கைலாசபதியின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது. வளாகத்தைத் திறக்காமல் நிறுத்துவதற்குத் தமிழரசுக் கட்சியினர் தம்மாலான அனைத்தையும் செய்தனர். அக்காலப்பகுதியில் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு எதுவும் வடக்குக் கிழக்கில் நடக்கக் கூடா என்பதே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.



# மருந்துப் பொருட்கள் மற்றும் பாலுற்பத்தி வசதிகளுக்கு ஜப்பான் ஆதரவு

வட மாகாணத்தின் இரு கூட்டுறவு சங்கங்களுக்கு "Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)" திட்டத்தின் கீழ், மானிய உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவர் ஏ.என்.மனுநீதி மற்றும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் வி.கேதீஸ்வரன் ஆகியோருடன் கைச்சாத்திட்டிருந்தார்.

இந்த இரண்டு திட்டங்களுக்கும் ஜப்பானிய அரசாங்கம் மொத்தமாக 103,924 அமெரிக்க டொலர்களை (அண்ணளவாக ரூ.32 மில்லியன்) வழங்கியுள்ளது. அதனூடாக வடக்கு மாகாணத்தில் மருத்துவ மற்றும் கால்நடை வசதிகளை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேம்படுத்துவது என்பது இலங்கைக்கான ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக் கொள்கையில் பிரதானமாக கவனம் செலுத்தப்படுகின்றது. நாட்டில் சமாதான கட்டியெழுப்பல் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான செயற்பாடுகளுக்கு ஜப்பானிய அரசாங்கம் உதவிகளை வழங்குகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இது போன்ற பல்வேறு உதவித் திட்டங்களினூடாக இதை முன்னெடுக்கின்றது.

தூதுவர் மிசுகொஷி குறிப்பிடுகையில், சமூக சேவை உட்கட்டமைப்பு மேம்படுத்தல், தனிநபர்களுக்கு பயனளித்தல் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் காணப்படும் பிரதான தொழிற்துறைகளின் நிலைபேறாண்மை போன்றவற்றுக்கு இந்த திட்டங்களினூடாக மேற்கொள்ளப்படும் பங்களிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார். மேலும், வட மாகாணத்திலுள்ள பரந்த இன மற்றும் மத குழுக்கள் மத்தியில் இதுபோன்ற செயற்பாடுகளினூடாக சுபிட்சம் ஊக்குவிக்கப்படும் எனவும் அழகிய நாட்டின் நீண்ட கால உறுதித் தன்மை மற்றும் சுபிட்சத்துக்கு இது முக்கியமானது என்பதையும் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவிய யுத்தத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட பிரதேசமாக கிளிநொச்சி அமைந்திருந்ததுடன், இடம்பெயர்வுகள் காரணமாக, மனிதர்களைப் போன்று கால்நடைகளும் பாதிக்கப்பட்டிருந்தன. கடினமான சூழ்நிலையிலும், கிளிநொச்சியை சேர்ந்த விவசாயிகள், தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதுடன், விவசாய செயன்முறைகளை நவீனமயப்படுத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளனர். பால் சேகரிப்பு மற்றும் சிறியளவு பால் பெறுமதி சேர்ப்பு பதப்படுத்தல் மற்றும் விற்பனை போன்றவற்றில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள இந்த சங்கத்தினூடாக, இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும், பால் சேகரிப்பை ஆகக்குறைந்தது 80சத வீதத்தினால் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை ஆரம்பிக்கவும், ஜப்பானிய தூதரகத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் உதவியிருந்த தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்துக்கு நன்றி தெரிவிக்கின்றோம். தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கியிருந்தமை போன்றவற்றுக்காக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், கூட்டுறவு விருத்தி திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகம் போன்றவற்றின் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்."

# Francophonie 2024– இசை நிகழ்ச்சி



இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான சுவிட்சர்லாந்து தூதரகம், International Organization of la Francophonie உடன் இணைந்து, கொழும்பு மற்றும் அஹங்கம பகுதிகளில் இசை நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்யவுள்ளது. வருடாந்த பிரெஞ்சுமொழி மற்றும் Francophonie கலாசாரங்கள் போன்றவற்றுடன் சுவிஸ் இசைக் கலைஞர்களான மார்க் அய்மன் Marc Aymon மற்றும் மில்லா பெஸ்ஸன் Milla Besson ஆகியோருடன் Francophonie 2024ஐ கொண்டாடும் நோக்கில், இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அறிமுக நிகழ்வு மார்ச் மாதம் 16ஆம் திகதி பி.ப. 7 மணி முதல் கொழும்பு 'Alliance Francaise de Colombo' இல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து, மார்ச் 17ஆம் திகதி பி.ப. 7.00 மணி முதல் TRAK அஹங்கமவிலும் நடைபெறும். குறித்த நிகழ்வுகளை அனைவராலும் இலவசமாக கண்டுகளிக்க முடியும்.

Master classes களும் மார்ச் மாதம் 16ஆம் திகதி கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்திலும், மார்ச் 19ஆம் திகதி உருகுணை பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

Valais ஐச் சேர்ந்த பிரதான கலைஞரான மார்க் அய்மன் Marc Aymon ஒரு கவிஞர் மற்றும் பாடகருமாவார். பிரெஞ்சு மொழி பேசப்படும் நாடுகளில் பெருமளவில் இசைக்கப்படும் 8 அல்பம்கள் மற்றும் 4 தனிப் பாடல்கள் போன்றவற்றின் உரிமையாளராக அய்மன் திகழ்கின்றார். பரகுவே, பிரான்ஸ், புயனோஸ்அயர்ஸ், கென்யா, ருவாண்டா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் Francophonie கொண்டாட்டங்களில் இவர் தமது பாடல்களை இசைத்துள்ளார்.

Valais dulcimer, Drums, Kotamo, Handpan, Bockhornxyloமற்றும் Glasudu போன்ற இசைக்கருவிகளை இசைப்பதில் திறமையானவர்.

மில்லா பெஸ்ஸன் ஆடைடய Milla Besson சுவிஸ் நாட்டின் பாடகரும் பாடலாசிரியருமாவார். இவர் சர்வதேச மட்டத்தில் பிரென்சு மொழி பேசப்படும் நாடுகளில் இசை நிகழ்வுகளை முன்னெடுத்துள்ளதுடன், Tim Dup, Aliose, Jeremie Kisling மற்றும் மார்க் அய்மன் Marc Aymon ஆகியோருடன் மேடையை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துளார்.

இந்தப் பயணத்தில், மார்க் அய்மன் மற்றும் மில்லா பெஸ்ஸன் ஆகியோர் தமது அண்மைய வெளியீடான 'Glaneurs'இன் 15 சுவிஸ் கவிதைகள் மற்றும் பாடல்களை வெளிப்படுத்துவார்கள்.

இது சுவிஸ் கலாசார பாரம்பரியத்தை உணர்த்துவதாக அமைந்திருக்கும்.

# மௌனமான கனவுகள்



எந்தன் அன்பிலும் ஏக்கத்
தவிப்பிலும்
என்றும் குற்றங்கள் இல்லையே
தோழியே
கருவிழி மணியென உன்னை
மூடியே
காத்தகைகளும் கனலெனவேகுதே

கயவரின் பார்வையில் கண்ணியம்
மறைந்திட
கடமைகள் கூடுதே கற்பின்
அரசியே
உண்மைக் காதலில் உலகையே
மறந்தவன்
உன்னையே நெஞ்சினில்
சிலையென செதுக்கினேன்

தந்தையின் தாலாட்டை தந்தவன்
நானென்று
தயக்கங்கள் இன்றியே மார்போடு
அணைத்தாயே
ஆயுள் கைதியாய் அன்பே
சிறையிடு
ஆணைகள் விதித்திடு நொடியிலே
மடிகிறேன்

விழிகளும் இதுவரை மாதுவை
மறுத்தது
விஞ்சிடும் உறவென நீவரும்
முன்னமே
மிடுக்கானஆடவன் செருப்பாகிப்
போனேனே

மிளிர்கின்ற தாரகையே
மிதிக்கின்றாய் காலடியில்
மாயத் திரைகள் நம்மை
சூழ்ந்தனவே
மௌனத்தில் அமிழுதே
கண்மணியின் கனவுகள்...

சம்பூர் சமரன்,
திருகோணமலை.

# மகளிர் தின வாழ்த்துகள்

இந்நாளில் மட்டும் மகளிர் புகழ் பாடாதே
எந்தாளும் அவர்களை கொண்டாடு
அப்போதே மானுடம் உயிர்க்கும்
இதுவே தமிழர் அறம் என்றே பண் பாடு

மாதொரு பாகனார் நீ உருமாறு
மாதவம் செய்திடும் வரமது
அவளது விருப்பையும் செவிமடு
நல்வழிக்கும் அவளே ஊன்றுகோல் என்றிரு


ஆண்மையே பலம் என்றே நினையாதே
ஆண்மைக்கும் பலம் தந்தவள் அவள் தானே
பெண்மையின் பொறுமைக்கு முன்னே
எவ்வாண்மையும் சிறுமைதானே

ஆண் என்றும் பெண் என்றும் பேதம் வேண்டா
இருபாலும் இயற்கையின் கொடை என்றே
வாழ்தலில் அன்பின் ஈர ஊற்றை நிறைத்து
வாழும் போதே வாழ்த்திடுவோம்

உன் இணையோடு மகிழ்ந்திரு
பிற பெண்ணை மதித்திடு
சிறுமியருக்கு காப்பாயிரு
சீரழிக்கும் கயவருக்கு வாளை எடு

வையகம் எங்கும் போதையின் பார்வை
வாழ்தலோ இங்கு அழிவின் பாதை
நல்லதை விதைக்க யாருண்டு காண்பீர்
அல்லவை செய்யா மாந்தராய் வாழ்வீர்

பெண் விடுதலையே மண் விடுதலை
என்றொரு குரல் உனக்குள் ஒலித்தால்
நீயும் அவர் வழியில் நின்றே
நம் பெண்களை பாதுகாக்க உறுதியெடு...



ரேணுகாசன்

# வார்த்தைகள்!



எண்ணப் பிரளயம்
ஊற்றெடுத்து
அருவியாய்ப்
பொழியும்போது
துளிகளாய்த்
தெறிப்பவையே
வார்த்தைகள்!

தேடல் படுக்கைகளில்
திணிந்து கிடக்கும்
பெருமணற்பரப்பில்
கைப்பிடி மண்ணாய்
அள்ளிச் சொரிபவை
அடிக்கோடிட்ட
வார்த்தைகள்!

உறவை இழந்த
உயிர்வதை தருணத்தில்
கடல்போல்
கவலைகள் சிற்றலை
களாய்ச்
சிதறும் உப்புக்
கரிக்கும் உளறும்
வார்த்தைகள்!


எண்ணமண்டலத்தில்
இருக்கும்
கருந்துளையாய்
உணர்வெல்லாம்
விழுங்கி
ஏப்பமிடும்
வார்த்தைகள்!

நாகரிகத்தில்
செதுக்கி,
அறிவொளியில்
புடம்போட்டு
முதிர்ச்சியால் வரம்பு
கட்டி
வடிகட்ட
எத்தணிப்பின் உதறித்
தள்ளிவிடும்
ஒழுங்கமையா
வார்த்தைகள்!



சிவா ஈச்சையூர்

அமெரிக்கா



# நேருக்கு நேர் மோதும் பைடன் - ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடனும், டொனால்ட் ட்ரம்ப்பும் 2ஆவது முறையாக நேருக்கு நேர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் போட்டியிடும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், ஜனநாயகக் கட்சி சார்பில் நடைபெற்று வருகிறது.

இதற்கான தேர்தல், கடந்த செவ்வாய்க்கிழமை 10-க்கும் மேற்பட்ட மாகாணங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்றது. இதில் பெரும்பாலான இடங்களில் ஜோ பைடன் வெற்றி பெற்றார். ஜோர்ஜியாவில் நடந்த தேர்தலிலும் அவர் வெற்றி பெற்றுள்ளார். குறிப்பாக வேட்பாளர் தேர்வுப் போட்டியில் வெற்றி பெறுவதற்கான 1,968 பிரதிநிதிகளின் ஆதரவை ஜோ பைடன் பெற்றுள்ளார்.

இதன்மூலம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன், ஜனநாயக கட்சி சார்பில் 2ஆவது முறையாகப் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

81 வயதாகும் ஜோ பைடனை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார்.

இதனால் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருவரும் மீண்டும் நேருக்கு நேர் களம் காண இருக்கின்றனர்.




## முதலாவது போட்டியில் இலங்கையை வீழ்த்தியது பங்களாதேஷ்

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 255/10 (48.5 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜனித் லியனகே 67 (69), குசல் மென்டிஸ் 59 (75), பதும் நிஸங்க 36 (28), அவிஷ்க பெர்ணாண்டோ 33 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: தன்ஸிம் ஹஸன் சகிப் 3/44, ஷொரிஃபுல் இஸ்லாம் 3/51, தஸ்கின் அஹ்மட் 3/60, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/33)

பங்களாதேஷ்: 257/4 (44.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ ஆ.இ 122 (129), முஷ்பிக்கூர் ரஹீம் ஆ.இ 73 (84), மகமதுல்லா 37 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: டில்ஷான் மதுஷங்க 2/44, லஹிரு குமார 1/35, பிரமோத் மதுஷன் 1/53)

போட்டியின் நாயகன்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கனடா

## மனைவியை கொன்றவருக்கு ஆயுள் தண்டனை

கனடாவில் தனது மனைவியை 35 தடவைகள் கத்தியால் குத்திக் கொன்ற நபருக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் பிரமட்டனைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு பொதுப் பூங்கா ஒன்றில் வைத்து குறித்த நபர் தனது மனைவியை இவ்வாறு கொடூரமாக கத்தியால் குத்திக் கொன்றுள்ளார்.

66 வயதான ஜர்னாயில் ரன்டாவா என்ற நபரே இவ்வாறு 64 வயதான டால்பிர் என்ற தனது மனைவியை கொலை செய்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்தே குறித்த நபர் இவ்வாறு தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ஜப்பான்

## வெடித்து சிதறிய ரொக்கெட்

ஜப்பானை சேர்ந்த 'ஸ்டார்ட் அப் ஸ்பேஸ் ஒன்' என்ற தனியார் விண்வெளி நிறுவனம், விண்ணில் ரொக்கெட்டை செலுத்திய சில வினாடிகளில், அது திடீரென்று நடுவானில் வெடித்து சிதறிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் வானில் பெரும் புகைமூட்டம் ஏற்பட்டது. ரொக்கெட்டின் பாகங்கள் விழுந்ததில் சில இடங்களில் தீப்பிடித்த நிலையில் தீயை அணைக்கும் முயற்சியில் வீரர்கள் ஈடுபட்டனர்.

ஜப்பானில் முதல் முறையாக தனியார் நிறுவனம் ஒன்று விண்ணுக்கு ரொக்கெட் அனுப்பும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.




## சம்பியன்ஸ் லீக்: மிலனை வென்று காலிறுதியில் அத்லெட்டிகோ மட்ரிட்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் காலிறுதிப் போட்டிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான இறுதி 16 அணிகளுக்கான முதலாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்த மட்ரிட், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற நிலையில் மொத்த கோல் எண்ணிக்கையானது 2-2 என மேலதிக நேர முடிவிலும் காணப்பட்டது.

இந்நிலையில், பெனால்டியில் 3-2 என்ற ரீதியில் வென்ற மட்ரிட் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மிலனின் அலெக்ஸிஸ் சந்தேஸ், டேவிட் கிளாசெனின் உதைகளை மட்ரிட்டின் கோல் காப்பாளர் ஜன் ஒப்ளக் தடுத்ததுடன், தனதுதையை லொட்டரோ மார்ட்டினெஸ் வெளியே செலுத்தியிருந்தார். ஹகன் கல்ஹனொக்லு, பிரான்செஸ்கோ அக்கர்பி ஆகியோரே கோல் கம்பத்துக்குள் செலுத்தியிருந்தனர். மட்ரிட்டின் மெம்பிஸ் டிபே, றொட்றிகோ றிகெல்மி. ஏஞ்சல் கொரேரா ஆகியோர் தமதுதைகளை உட் செலுத்தியதுடன், சாவுல் நிகேஸின் உதையை மிலனின் கோல் காப்பாளர் யன் சோமர் தடுத்திருந்தார்.

மட்ரிட் சார்பாக, அந்தோனி கிறீஸ்மன், மெம்பிஸ் டிபே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெடெரிக்கோ டிமர்கோ பெற்றிருந்தார்.

இதேவேளை, நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட், தமது மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்று, 3-1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. டொட்டமுண்ட் சார்பாக ஜடோன் சஞ்சோ, மார்கோ றொய்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

கர்நாடகம்

## கொலை செய்து சடலத்தை தொங்கவிட்ட கொடூரம்



கர்நாடகாவில் மர்மக் கும்பல் ஒன்று காங்கிரஸ் கட்சி பிரமுகரைக் கொலை செய்து கை, கால்களைக் கட்டி மரத்தில் தொங்கவிட்டுச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கட்சி பிரமுகரான இவர், அவ்வப்போது காங்கிரஸ் திட்டங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வந்துள்ளார். இந்நிலையில் இவர், புதன்கிழமை (13) இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது இவரை பின் தொடர்ந்து வந்த கும்பல் ஒன்று, ஆள் நடமாட்டம் இல்லாத மலைப் பகுதியில் வைத்து அவரை, வெட்டிக் கொலை செய்துள்ளனர். பின்னர் கை, கால்களைக் கயிற்றில் கட்டி சடலத்தை மரத்தில் தொங்கவிட்டுச் சென்றுள்ளனர்.



திருச்சி

## குஷ்புவின் பேச்சால் உருவப்படம் எரிப்பு

மகளிர் உரிமை திட்டப் பயனாளிகளை இழிவுபடுத்திப் பேசியதாகப் பாரதிய ஜனதா கட்சியின் ( பா.ஜ.க) நிர்வாகியும் நடிகையுமான குஷ்பு மீது புகாரும் கண்டனமும் எழுந்துள்ளன. அந்தவகையில், குஷ்புவுக்கு எதிராக, பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சியில் மத்திய மாவட்ட மகளிர் அணி சார்பில், மத்திய பேருந்து நிலையம் அருகே பெரியார் சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது குஷ்பு உருவப் படத்தைக் கிழித்துக் கண்டன முழக்கம் எழுப்பினர்.

அதேபோல், திருச்சி உறையூர் குறத்தெரு பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்குத் திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க) மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மதனா தலைமை வகித்தார்.

இதில் குஷ்புவின் உருவப் படத்தை எரித்துக் கண்டன முழக்கம் எழுப்பினர். இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 – வட மாகாணத் தொடர்: கிளி தகுதிகாண் போட்டிகள் நாளை

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 - வட மாகாணத் தொடரின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகளானவை, விளையாட்டமைச்சின் மைதானத்தில் நாளை சனிக்கிழமை (16) நடைபெறவுள்ளது.

10, 12 வயதுக்குட்பட்ட இரு பாலருக்குமான போட்டிகளில் 750 மாணவர் பங்கேற்கவுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் மாகாண இறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகவுள்ளன.






## குருக்கள்மடம் கலைவாணி ம.வி. மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி: சம்பியனான சம்பந்தர் இல்லம்

வ.சக்தி

மட்டக்களப்பு- பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் சம்பந்தன் இல்லம் சம்பியனானது.

இரண்டாமிடத்தை சுந்தரர் இல்லமும், மூன்றாமிடத்தை அப்பர் இல்லமும் பெற்றுக் கொண்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 15, மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.